**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 87/2018**

நாள் 17.02.2025

PW1 – வேலுச்சாமி

த/பெ – லேட் கருப்பகவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2025.)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அம்மாசைக்கவுண்டர் இறக்கும் போது அவருக்கு 108 வயது இருந்திருக்கும். அவர் விவசாய தொழில் தான் செய்து வந்தார். சர்வே எண்.449 ல் கிழமேல் வண்டிபாதைக்கு தென்புறமாக மாரப்பகவுண்டருக்கு 75 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.463 ஆனது தென்வடலாக செல்லும் மெயின் ரோடு என்றால் சரிதான். அந்த தென்வடல் ரோட்டிற்கு கிழபுறம் ராமாத்தாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட 91 செண்ட் நிலம் உள்ளது என்றால் தவறு, அது அம்மாசைக்கவுண்டர் பெயரில் உள்ளது. அதேபோல் கிழபுறம் மாரப்ப கவுண்டருக்கு 70 செண்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். 1,3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள தானசெண்டில்மெண்ட் பத்திரங்களை நான் பார்த்துள்ளேன். அந்த பத்திரங்கள் 2013-ம் ஆண்டில் ஏற்பட்டது. நாங்கள் ஏற்கனவே அசல் வழக்கு எண்.43/2015 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் அது என் அப்பா தாக்கல் செய்த வழக்கு. அந்த வழக்கில் அம்மாசைக்கவுண்டரும் ஒரு தரப்பினரா சேர்த்து வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கை எனது அப்பா பாக பிரிவினை கேட்டு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் அம்மாசைக்கவுண்டர் என்ன சொல்லி பதிலுரை தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 செண்டில்மெண்ட் ஆவணம் ஆனது

அம்மாசைக்கவுண்டர் என்பவர் துளசிமணி வகையராவுக்கு எழுதி கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த செண்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட ஏ செட்யூல் சொத்து பொன்னுச்சாமிக்கும், பி செட்யூல் சொத்து துளசிமணிக்கும், சி அயிட்ட சொத்து ராமாக்காளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.8 செண்டில்மெண்ட் ஆவணத்தின்படி அவரவர்கள் சொத்தை தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. சர்வே எண்.449 க்கு கிழபுறம் உள்ள தென்வடல் ரோடுக்கு கிழபுறமாக உள்ள 78 செண்ட் மாரப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ராமாத்தாளுக்கு அங்கு சொத்தே கிடையாது.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.02.17 13:00:09 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**